Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, ஆகஸ்ட் 01, 2021 4 பக்கங்கள் ரூ.2/- | இதழ் 17

## கோயம்பேடு பகுதியில் 6 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த முதியவர் கைது

சென்னை, ஆகஸ்ட் 01 2021: கோயம்பேடு பகுதியில் வசிக்கும் 26 வயது பெண்மணியின் 6 வயது மகள் கடந்த 28.07.2021 அன்று மதியம் 1.00 மணியளவில் தனது வீட்டின் அருகே உள்ள மளிகைக் கடைக்கு சென்ற போது, மளிகைக்கடை உரிமையாளர் காளிமுத்து, என்பவர் சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி, சிறுமியை கடைக்குள் அழைத்து பாலியல் தொந்தரவு செய்துள்ளார். சிறுமி அழுதுகொண்டே நடந்த சம்பவத்தை தனது தாயிடம் கூறியுள்ளார். சிறுமியின் தாய் இது குறித்து திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போக்சோ சட்டப்பிரிவில் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது.

திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த மளிகைக்கடை உரிமையாளர் காளிமுத்து, என்பவரை கைது செய்தனர்.

விசாரணைக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட காளிமுத்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## 3 வது அலையில் குழந்தைகளை பராமரிக்க 25 சதவீத படுக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - நல்வாழ்வுத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன்

சென்னை, ஆகஸ்ட் 31 2021: 3 வது அலையில் குழந்தைகளை பராமரிக்க 25 சதவீத படுக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாடு முழுவதும் ஒரு வார காலத்துக்கு தீவிர கொரோனா விழிப்புணர்வு பரப்புரை மேற்கொள்ளப்படும் எனவும் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் சென்னை கலைவாணர் அரங்கில் பெருந்தொற்றை தவிர்க்கும் நோக்கில் தமிழ்நாடு அரசின் கொரோனா விழிப்புணர்வு தொடர் பிரச்சார விழா நடைபெற்றது. அதில் பங்கேற்ற முதலமைச்சர் ஸ்டாலின், விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடக்கி வைத்தார். அந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தேவையான நடவடிக்கை

நிகழ்ச்சியில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், கொரோனா மூன்றாவது அலை வருமா? என்பது குறித்து இப்போது தெரியாவிட்டாலும், அதை தடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஒத்துழைத்தால் மட்டுமே, கொரோனாவில் இருந்து மீண்டு வர முடியும் என்றார். தொடர்ந்து பேசிய அவர், தமிழ்நாடு முழுவதும் ஒரு வார காலம் தீவிர கொரோனா விழிப்புணர்வு பரப்புரை மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் கூடுதல் கொரோனா பாதிப்பு ஏற்படும் பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. அங்கு தடுப்பூசி போடுவதை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது அலையில் குழந்தைகள் அதிகமாக பாதிக்கப்படுவார்கள் என கூறப்படுகிறது. எனவே 25 சதவீத படுக்கைகள் குழந்தைகளுக்காக அமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

## கருணாநிதி திருஉருவ பட திறப்பு விழா அழைப்பிதழை குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்திடம் சட்டப்பேரவை தலைவர் அப்பாவு வழங்கினார்

டெல்லி, ஆகஸ்ட் 01 2021: தமிழ்நாடு சட்டப்பேரவையின் நூற்றாண்டு விழாவையொட்டி, முன்னாள் முதல்வர் கருணாநிதி திருஉருவ பட திறப்பு விழாவிற்கான அழைப்பிதழை குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்தை சந்தித்து சட்டப்பேரவை தலைவர் அப்பாவு வழங்கினார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் திருஉருவ பட திறப்பு விழா, ஆகஸ்ட் 2 ஆம் தேதி நடைபெற உள்ளது. இந்நிலையில், திருவுருவப்படத்தை மாலை 5 மணிக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்து வைக்கிறார். அதற்காக, கடந்த 10 நாட்கள் முன்னதாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ராம்நாத் கோவிந்திடம் நேரில் சந்தித்து அனுமதி பெற்று இருந்தார்.

இந்நிலையில், குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்தை சந்திக்க, சபாநாயகர் அப்பாவு நேற்று டெல்லி பயணம் மேற்கொண்டார். இதனையடுத்து, தற்போது சபாநாயகர் அப்பாவு, குடியரசு தலைவரை சந்தித்து, முன்னாள் முதல்வர் கருணாநிதியின் திருஉருவ பட திறப்பு விழாவிற்கான அழைப்பிதழை நேரில் வழங்கினார். அதுமட்டுமில்லாமல், சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் கடந்த 100 ஆண்டுகளில் தமிழகம் கண்ட வளர்ச்சி குறித்த "தி டிராவிடியன் மாடல்" புத்தகத்தை குடியரசுத் தலைவருக்கு அன்பளிப்பாக வழங்கி உள்ளார்.

## இந்தியா முழுவதும் 92.8 சதவீத குடும்ப அட்டைகளை ஆதார் எண்ணுடன் இணைக்கும் பணியை முடித்து விட்டன

டெல்லி, ஆகஸ்ட் 01 2021 நாட்டில் இதுவரை 92.8 சதவீத ரேஷன் அட்டைகள், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளதாக இந்திய அரசின் உணவு மற்றும் பொது விநியோகத்துறை இணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரேஷன் கார்டு- ஆதார் எண் இணைப்பு குறித்து மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு இந்திய உணவு மற்றும் பொது விநியோகத்துறை இணையமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதி எழுத்துபூர்வமாக பதில் அளித்துள்ளார். அதில், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் 21.91 கோடி ரேசன் கார்டுகளை, அதாவது 92.8 சதவீத குடும்ப அட்டைகளை ஆதார் எண்ணுடன் இணைக்கும் பணியை முடித்து விட்டன.

இதில் தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 70.94 கோடி (90 சதவீதம்) பயனாளிகள் உள்ளனர். கடந்த 23ஆம் தேதி நிலவரப்படி, நாட்டில் உள்ள சுமார் 4.98 லட்சம் ரேஷன் கடைகளில் (92.7 சதவீதம்) மின்னணு விற்பனை இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பொது விநியோக திட்டத்தின் கீழ் நாட்டில் 5.38 லட்சம் ரேஷன் கடைகள் செயல்பாட்டில் உள்ளன. உத்தர பிரதேசம், மகாராஷ்டிர மாநிலங்களுக்கு அடுத்தபடியாக பீகாரில் அதிக அளவிலான ரேசன் கடைகள் உள்ளன. உத்தர பிரதேசத்தில் 80,493, மகாராஷ்டிரத்தில் 52,532, பீகாரில் 47,032, தமிழகத்தில் 34,776 நியாய விலைக் கடைகள் உள்ளன.

2020-21 ஆம் ஆண்டில் காரீஃப் சந்தை பருவத்தில், 869.29 லட்சம் மெட்ரிக் டன் நெல்லும், 2021-22 ராபி சந்தை பருவத்தில் 433.32 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இது, இதுவரை இல்லாத அளவுக்கு மிக அதிகமான கொள்முதலாகும் என்றும் இணை அமைச்சர் கூறியுள்ளார்.

## கேரளாவில் கொரோனா கட்டுப்பாட்டில் உள்ளது, தடுப்பூசிகள் தான் தீர்ந்து விட்டது - அமைச்சர் வீணா ஜார்ஜ்

திருவனந்தபுரம், ஆகஸ்ட் 01 2021: கேரளாவில் கொரோனா கட்டுப்பாட்டில்தான் உள்ளது, ஆனால் தடுப்பூசிகள் தான் தீர்ந்து விட்டது என கேரளாவின் சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தாக்கம் அண்மையில் தான் குறைந்தது. இந்நிலையில், கடந்த சில தினங்களாக இந்தியாவில் மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்துக் கொண்டு செல்கிறது. அதிலும் குறிப்பாக கேரளாவில் கொரோனா வைரஸின் தாக்கம் மிக அதிக அளவில் பரவிக் கொண்டே செல்கிறது.

கட்டுப்பாட்டில் கொரோனா

கேரளாவில் தினசரி கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 20,000 க்கும் அதிகமாக உள்ளது. எனவே, அம்மாநிலத்தில் தடுப்பூசி போடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இது குறித்து சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் கூறுகையில், கேரளாவில் கொரோனா




தொற்றுப் பரவல் நிலைமை முற்றிலும் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. ஆனால் தடுப்பூசிகள் தான் தீர்ந்து விட்டது என தெரிவித்துள்ளார்.

## மீராபாய் சானுவை கவுரவிக்க, வேலூர் தலைமை தபால் அலுவலகத்தில் பிரத்தியேக மின்னணு-தபால் கவுன்டர் திறப்பு

சென்னை, ஆக 01, 2021: டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்ற இந்தியாவின் மீராபாய் சானுவுக்கு ரூ.10 செலவில் மின்னணு-தபால் மூலம் வாழ்த்துகள் அனுப்பி கவுரவிக்க, ஒரு பிரத்தியேக மின்னணு-தபால் கவுன்டர் வேலூர் தலைமை தபால் அலுவலகத்தில் 29.07.2021ம் தேதி அன்று காலை 10 மணிக்கு திறக்கப்பட்டது. நடக்கவிருக்கும் போட்டிகளுக்கு, இந்திய ஒலிம்பிக் குழுவினருக்கு, நாம் மின்னணு-தபால் மூலம் வாழ்த்துகள் தெரிவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியை கடந்த 2011ம் ஆண்டு ஜார்கண்ட்டில் நடந்த தேசிய விளையாட்டு போட்டியில் பளுதூக்கும் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற மற்றும் 2010ம் ஆண்டு உதய்பூரில் நடந்த சீனியர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்ற திரு எம். தமிழ் செல்வன் தொடங்கி வைத்தார். இவர் தற்போது, தபால் துறையில் தபால்காரராக பணியாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு வேலூர் பிரிவு தபால் அலுவலகங்களின் கண்காணிப்பாளர் திரு பி.கோமல் குமார் தலைமை தாங்கினார். மின்னணு-தபால் வசதியை பயன்படுத்தி, இந்தியர்களை பெருமைபட வைத்த இந்தியாவின் மீராபாய் சானுவுக்கு வாழ்த்துகள்



அனுப்பும்படி அவர் வேண்டுகோள் விடுத்தார். இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், வெற்றியாளர்களை ஊக்குவிப்பது மற்றும் திறமையாளர்களை அங்கீகரிப்பது ஆகும்.

இவ்வாறு வேலூர் பிரிவு தபால் அலுவலகங்களின் கண்காணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மருத்துவக் கல்வியில் அகில இந்திய தொகுப்பில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 27 சதவிகித இடஒதுக்கீடு

சென்னை, ஆகஸ்ட் 01, 2021: மாநில அரசு நடத்திவரும் மருத்துவக் கல்லூரிகளில் மாநிலங்கள் அகில இந்தியத் தொகுப்பிற்கு வழங்கி வரும் 15 சதவிகிதம் மருத்துவம் மற்றும் பல் மருத்துவ இளங்கலை படிப்பிற்கான இடங்களிலும், 50 சதவிகிதம் முதுநிலை மருத்துவ படிப்பிற்கான இடங்களிலும், இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்க வேண்டிய இடஒதுக்கீட்டினை பல ஆண்டுகளாக ஒன்றிய அரசு வழங்கவில்லை. இதனால் ஏறக்குறைய 10,000 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் பயிலும் வாய்ப்பு பறிபோய் விட்டது. சமூகநீதி மண்ணான தமிழகத்தில் உள்ள மாணவர்கள் இழந்த உரிமையை மீட்டெடுக்க, கழகத் தலைவரின் அறிவுறுத்தலின்படி திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் தமிழக மாணவர்களுக்காகவும், புதுச்சேரி மாணவர்களுக்காகவும் 2 வழக்குகளை தொடுத்ததில் சென்னை உயர்நீதிமன்றம் கடந்த ஆண்டு 27.07.2020 அன்று மாநில அரசு நடத்திவரும் மருத்துவ கல்லூரிகளில் அகில இந்தியத் தொகுப்பிற்கு அளிக்கப்படும் மருத்துவக் கல்வி இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இட ஒதுக்கீட்டு உரிமை இருக்கிறது என்றும், தமிழ்நாட்டை பொறுத்தவரையில் 69 சதவிகிதம் இடஒதுக்கீட்டின் படி 50 சதவிகித இடஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது. ஆனால் ஒன்றிய அரசு அத்தீர்ப்பை செயல்முறைபடுத்தவில்லை. உயர்நீதிமன்ற உத்தரவை செயல்படுத்தாதற்காக தி.மு.க. சார்பில், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. அவ்வழக்கு எண்.197/2021-ல் தாக்கல் செய்யப்பட்டது.



அத்தீர்ப்பினை செயல்முறைபடுத்த ஒன்றிய பா.ஜ.க. அரசு தயாராக இல்லாமலும், வலியுறுத்தி பெற அன்றைய அ.தி.மு.க. அரசு திராணியற்று நின்றதும் நாடு அறியும். ஆனால் கழகத் தலைவரின் ஆணைக்கிணங்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இது தொடர்பாக தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வலியுறுத்தி போராடி வந்தது. இந்நிலையில் கழகத் தலைவர் முதல்வராக பொறுப்பேற்றவுடன் முதன்முதலில் இந்திய பிரதமர் அவர்களை சந்தித்த போது வைத்த முக்கிய கோரிக்கைகளில் "மருத்துவக் கல்வியில் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க வேண்டும்" என்ற கோரிக்கையை வலியுறுத்தினார். அதனடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டு சரியாக ஒரு வருடம் கடந்த நிலையில் தமிழக முதல்வர் மாண்புமிகு கழகத் தலைவர், அவர்களின் தொடர் வலியுறுத்தலால், "வரும் 2021-22 கல்வி ஆண்டிலிருந்து மருத்துவக் கல்வியில் அகில இந்திய தொகுப்பில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டுள்ளது" என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இது தமிழக முதல்வர் மாண்புமிகு கழகத் தலைவர் முன்னெடுத்த சமூகநீதி போராட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்பதனை தி.மு.க. மாணவர் அணி நன்றி உணர்வுடன் இங்கே பதிவு செய்ய விரும்புகிறது. தமிழக முதல்வர் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்கள் அறிவித்துள்ளபடி, அகில இந்திய தொகுப்பில் தமிழ்நாட்டிலுள்ள இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் மருத்துவ கல்வியில் 27 சதவிகித இடஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டுள்ளது என்றாலும், 50 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற தி.மு.க.-வின் உறுதியான அழுத்தமான கோரிக்கையை வலியுறுத்தி சமூகநீதியை காக்கும் உறுதியான போராட்டத்தை திராவிட முன்னேற்ற கழகமும், இந்த அரசும் தொடர்ந்து நடத்தும் என்ற அவரது எண்ணத்தை உணர்ந்த தி.மு.க. மாணவரணி கழகத் தலைவருக்கு நன்றி உணர்வுடன், அவருடைய வழிகாட்டுதலுடன் சமூகநீதிக்கான போராட்டக் களத்தில் என்றென்றும் முன்கள சிப்பாய்களாய் கழக மாணவரணி செயல்படும் என உறுதியேற்கிறோம்.

"சமூகநீதியே மக்கள் நீதி" என்னும் தமிழக முதல்வர் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களுக்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியிலுள்ள மாணவர் சமுதாயத்தின் சார்பில் தி.மு.க. மாணவரணி கோடானகோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

## விக்கிரவாண்டியில் மாவட்ட தி.மு.க., இளைஞரணி சார்பில் முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து எம்.எல்.ஏ.,புகழேந்தி இனிப்பு வழங்கினார்

விக்கிரவாண்டி, ஆக.01 2021: விழுப்புரம் மாவட்ட தி.மு.க., இளைஞரணி சார்பில் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து எம்.எல்.ஏ., புகழேந்தி இனிப்புவழங்கி கொண்டாடினர்.

அகில இந்திய மருத்துவ படிப்பில் ஓபிசி பிரிவினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு பெற்றுத்தந்த தமிழகமுதல்வர்

ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து மாவட்ட தி.மு.க., இளைஞரணி சார்பில் விக்கிரவாண்டியில் நடந்த நிகழ்ச்சிக்கு எம்.எல்.ஏ., புகழேந்தி தலைமை தாங்கி மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் இனிப்பு வழங்கினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினகரன், துணை அமைப்பாளர்கள் பாலாஜி, இளந்திரையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் எம்.எல்.ஏ., புஷ்பராஜ், நகர செயலாளர் நைனாமுகமது, முன்னாள் சேர்மன் அப்துல் சலாம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் பாபு ஜீவானந்தம், எத்திராசன், ஒன்றிய செயலாளர்கள் வேம்பி ரவி, மும்மூர்த்தி, முருகன், நகர தலைவர் தண்டபாணி, ஒன்றிய அமைப்பாளர்கள் வேல் முருகன், தண்டபாணி, கணபதி, கார்த்தி, பாலகிருஷ்ணன், மாணவரணி



வெற்றிகொண்டான், யுவராஜ், சபிபுல்லா, பிரசாத், அசோக், தொழில் நுட்ப அணி ரகுபதி, அன்பரசன், கபிலன் முன்னாள் கவுன்சிலர் பாலு உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ராமேஸ்வரத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

ராமேஸ்வரம், ஆக 01, 2021: ராமேஸ்வரத்தில் போக்குவரத்து துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் பிறந்த நாளில் மனோலயா மனவளர்ச்சி குன்றியோர் இல்லத்தில் அங்கே தங்கியிருக்கும் மன நோயளிகளுக்கு மதிய உணவு மற்றும் உடைகளை வீட்டு வசதி சங்க தலைவர் வீ. அயோத்திராஜன் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலில் ராஜகண்ணப்பன் பெயரில் அர்ச்சனை மற்றும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

இந்தநிகழ்ச்சியில் தொ.மு.ச. தொழிற்சங்கத்தைச் சேர்ந்த முனியசாமி, கண்ணன், வீரபெருமாள், சாகுல், க.செந்தில், ராஜா மற்றும் கழக தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் காலையில் வெளிவரும்
ஹலோ மிரர் மெட்ராஸ் நாளிதழுக்கு
மாவட்டம், தாலுகா, பகுதி, நகர வாரியாக
அனுபவமுள்ள நிருபர்கள் தேவை
தொடர்புக்கு 8148231942
hellomadrasdaily@gmail.com



**திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டத்திற்கு புதிய செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக வெ.லோகநாதன் பொறுப்பேற்க உள்ளார்.**

# அகில இந்திய வானொலி, தேசிய சுகாதார இயக்கம் ஆகியவற்றின் அலுவலர்களுக்கான ஆன்லைன் பயிலரங்கை மத்திய சுகாதார அமைச்சகம் நடத்தியது

புதுதில்லி, ஆக 01, 2021: பத்திரிகை தகவல் அலுவலகம், களவிளம்பரம் மற்றும் தகவல் தொடர்பு அலுவலகம், தூர்தர்ஷன், அகில இந்திய வானொலி, அகில இந்திய வானொலி செய்திகள், மாநில நோய் தடுப்பு அலுவலர்கள் மற்றும் ஐந்து தென்னிந்திய மாநிலங்களில் (தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானா) இருந்து தேசிய சுகாதார இயக்கத்தின் தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு பிரிவு ஆகியவற்றின் அலுவலர்களுக்கான ஆன்லைன் பயிலரங்கை யுனிசெஃப்புடன் இணைந்து மத்திய சுகாதார அமைச்சகம் நடத்தியது. சரியான கொவிட் நடத்தை விதிமுறை குறித்த தகவல்களை வலியுறுத்துவதற்காகவும், தடுப்புமருந்து செலுத்திக்கொள்வதை ஊக்குவிப்பதற்கும் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானாவில் இருந்து 150-க்கும் மேற்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்ட அமர்வுக்கு மத்திய சுகாதார அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திரு லாவ் அகர்வால் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் பேசிய அவர், தகவல் தொடர்பு திட்டமிடுதலில் புதுமையை புகுத்துமாறும், சரியான கொவிட் நடத்தை விதிமுறை குறித்த சமூக பொறுப்பை ஊக்குவிக்குமாறும், தடுப்புமருந்து தயக்கத்தை போக்குவதற்காக அவை குறித்த தவறான தகவல்களை முறியடிக்குமாறும் அலுவலர்களை கேட்டுக்கொண்டார். சரியான கொவிட் நடத்தை விதிமுறை குறித்த மக்கள் இயக்கத்தை உருவாக்குமாறும், சமுதாய உதாரணங்களை முன்னிறுத்தியும், கொவிட் வீரர்கள் மற்றும் முன்கள சுகாதாரப் பணியாளர்களின் ஊக்கமளிக்கும் கதைகளை மக்களுக்கு எடுத்து சென்றும், சிறப்பான சமூக பங்களிப்பின் மூலம் உலகின் மிகப்பெரிய தடுப்புமருந்து நிகழ்வுக்கு ஆதரவளிக்குமாறு அவர் வலியுறுத்தினார். தடுப்புமருந்து தயக்கத்தை எதிர்கொள்வதில் பத்திரிகை தகவல் அலுவலகம், தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலியின் ஆக்கப்பூர்வ பங்களிப்பு குறித்து பேசிய அவர், தகவல்கள், காணொலிகள் மற்றும் சமூக ஊடக பதிவுகளை பத்திரிகை தகவல் அலுவலகம் சரிபார்ப்பதால், தவறான தகவல்கள் தடுக்கப்பட்டு, சரியான தகவல்கள் சரியான நேரத்தில் மக்களை சென்றடைவதாகவும் அவர் கூறினார். தடுப்புமருந்து பெற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதற்காக உள்ளூர் கலாச்சார விஷயங்களை சரியான முறையில் தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலி பயன்படுத்தி வருவதாக திரு அகர்வால் தெரிவித்தார். பொய் செய்திகள் மற்றும் தவறான தகவல்கள் அதிகளவில் சமூக ஊடகங்களில் உலா வருவதால், சர்வதேச உண்மை சரிபார்த்தல் குழுமத்துடன் இணைந்து 80-க்கும் மேற்பட்ட உண்மை சரிபார்ப்பு செயலிகளுடன் பயனர்களை இணைக்கும் வாட்ஸ் அப் சாட்பாட், தவறான தகவல்களை அடையாளப்படுத்தும் டிவிட்டர் மற்றும் முகநூல் எச்சரிக்கை அமைப்பு ஆகியவை குறித்து மக்களுக்கு தெரியப்படுத்துமாறும் அலுவலர்களை அவர் கேட்டுக்கொண்டார். தடுப்புமருந்து தயக்கத்தை போக்குவதிலும், சமூக ஊடகங்களில் பரவும் தவறான தகவல்களை முறியடிப்பதிலும் ஊடகங்களில் ஆக்கப்பூர்வ பங்கை அங்கீகரித்த அவர், "மக்கள் சோர்வுறலாம், வைரஸ் சோர்வடையாது.

நாமும் தொடர்ந்து பணியாற்றி, கொவிட்டுக்கு எதிரான நமது ஒருங்கிணைந்த போரை வலுப்படுத்த வேண்டும்," என்று திரு அகர்வால் கேட்டுக்கொண்டார். ஊடகங்கள் மற்றும் ஊடகத்தினருடன் தொடர்புடைய அனைவருமே சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர்கள் என்றும், சரியான கொவிட் நடத்தை விதிமுறை மற்றும் தடுப்புமருந்து குறித்து மக்களுக்கு அவர்கள் ஊக்கமளிக்கலாம் என்றும் திரு அகர்வால் குறிப்பிட்டார். "மூன்றாவது அலை எப்போது வரும் என்று நம்மிடம் அடிக்கடி கேட்கிறார்கள். நாம் அனுமதிக்கும் போது அது வரும் என்பதே எனது பதில்," என்று அவர் கூறினார். பெருந்தொற்றால் ஏற்படும் மன நல சிக்கல்கள் குறித்த நிகழ்ச்சிகள் மற்றும் தகவல்களை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். தங்களது அனுபவங்கள், மாநிலங்களில் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகள், சவால்கள், புதுமையான பிரச்சார யோசனைகளை பயிலரங்கில் பங்கேற்றோர் பகிர்ந்து கொண்டனர். மத்திய சுகாதார அமைச்சகம், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ஆகியவற்றின் மூத்த அதிகாரிகள் மற்றும் யுனிசெஃப் பிரதிநிதிகள் இதில் கலந்துக் கொண்டனர்.

# தேசிய மருத்துவ ஆணையத்துடனான ஆய்வு கூட்டத்திற்கு மத்திய சுகாதார அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தலைமை வகித்தார்

புதுதில்லி, ஆக 01, 2021: தேசிய மருத்துவ ஆணையத்துடனான ஆய்வு கூட்டத்திற்கு மத்திய சுகாதார அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று தலைமை வகித்தார். மருத்துவக் கல்வி குறித்த முக்கிய விஷயங்கள் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. தேசிய மருத்துவ ஆணைய அதிகாரிகள் கூட்டத்தில் தெரிவித்தவாறு, தேசிய எக்சிட் தேர்வை திட்டமிட்டவாறு 2023-ம் ஆண்டின் முதல் பாதியில் நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. செயல்முறையை சோதனை செய்து பார்ப்பதற்காகவும், மருத்துவ மாணவர்களின் அச்சத்தை போக்குவதற்காகவும், மாதிரி தேர்வு திட்டமிடப்பட்டு, 2022-ல் நடத்தப்படும். (1) தகுதி பெறும் இறுதி எம்பிபிஎஸ் தேர்வு, (2) நவீன மருத்துவ முறையை இந்தியாவில் மேற்கொள்வதற்கான உரிமம் பெறுதல் மற்றும் (3) விரிவான சிறப்புத்துறைகளில் முதுநிலை இடங்களை மதிப்பெண் அடிப்படையில் ஒதுக்கீடு செய்தல் ஆகியவற்றுக்கு நெக்ஸ்ட் (நிலை 1 மற்றும் 2) முடிவுகளை பயன்படுத்தவும் ஆலோசிக்கப்பட்டது. நெக்ஸ்ட் தேர்வை உலகத்தரம் வாய்ந்ததாக ஆக்குவதற்கான வழிகளும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. இந்தியா அல்லது உலகின் எந்த பகுதியில் பயிற்சி பெற்றிருந்தாலும் ஒரே மாதிரியான நெக்ஸ்ட் தேர்வு நடத்தப்படுவது இதன் சிறப்பாகும்.

இதன் மூலம் வெளிநாட்டு மருத்துவ பட்டம் பெற்றவர்கள்/பரஸ்பர அங்கீகாரம் ஆகிய சிக்கல்களுக்கு தீர்வு கிடைக்கும். கூட்டத்தில் பேசிய அமைச்சர், தரமான மருத்துவக் கல்வி, வெளிப்படைத்தன்மை மிக்க தேர்வு உள்கட்டமைப்பு மற்றும் மருத்துவ சேவைகளை உருவாக்க இந்திய அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், இந்த நோக்கத்தை அடைவதற்காக அனைத்து பங்குதாரர்களுடனும் தொய்வின்றி பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

# நியூஸ் ஆன் ஏர் வானொலி நேரலை செயலியின் பயன்பாட்டில் நாட்டிலேயே சென்னை 4-வது இடம்

புதுதில்லி, ஆக 01, 2021: 'நியூஸ் ஆன் ஏர்' செயலி மூலம் ஒலிபரப்பப்படும் அகில இந்திய வானொலி நிகழ்ச்சிகளை ஜெய்ப்பூர் மற்றும் பாட்னாவில் உள்ள இளைஞர்கள் விரும்பி கேட்கிறார்கள். இந்த நகரங்களில் உள்ள அகில இந்திய வானொலி நேரலை நேயர்களில் 60 சதவீதத்தினர் 18 முதல் 45 வயதினர் ஆவார்கள். முக்கிய நகரங்களுக்கான நியூஸ் ஆன் ஏர் தரவரிசை அளவீடுகளில் இது ஒரு புதிய மற்றும் சுவாரசியமான விஷயமாகும். அகில இந்திய வானொலியின் மராத்தி ஒலிபரப்பைத் தவிர, கன்னட மற்றும் இந்தி நிகழ்ச்சிகளும் புனேவில் விரும்பி கேட்கப்படுவதால், புனே ஒரு பன்முக கலாச்சாரம் கொண்ட மாநகரமாக இருப்பது தெளிவாகிறது.

நியூஸ் ஆன் ஏர் விரும்பி கேட்கப்படும் முதல் பத்து நகரங்களாக புனே, பெங்களூரு, ஹைதராபாத், சென்னை, மும்பை, தில்லி என்சிஆர், எர்ணாகுளம், ஜெய்ப்பூர், அகமதாபாத் மற்றும் பாட்னா ஆகியவை உள்ளன. அதிகமாக விரும்பி கேட்கப்படும் நிலையங்களில் அகில இந்திய வானொலி கொடைக்கானல் ஏழாவது இடம் பிடித்துள்ளது. சென்னையை பொருத்தவரை நியூஸ் ஆன் ஏர் நிகழ்ச்சிகளை கேட்பவர்களில் 7 சதவீதம் பேர் 18 முதல் 24 வரையிலான வயதினராகவும், 14 சதவீதம் பேர் 25 முதல் 34 வரையிலான வயதினராகவும், 12 சதவீதம் பேர் 35 முதல் 44 வரையிலான வயதினராகவும், 18 சதவீதம் பேர் 45 முதல் 54 வரையிலான வயதினராகவும் உள்ளனர்.

# மயிலம் ஒன்றிய திமுக நிர்வாகி சதீஷ் மாரடைப்பால் மரணம்

திண்டிவனம், ஆக.01 2021: கூட்டேரிப்பட்டில் தி.மு.க மயிலம் ஒன்றிய வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் சதீஷ் நேற்று (31ம் தேதி) மாரடைப்பால் மரணம் அடைந்தார்.

முன்னாள் கிராம நிர்வாக அலுவலர்களான தியாகராஜன், மங்கையர்கரசி ஆகியோரின் மகன் சதீஷ். இவர் மயிலம் ஒன்றிய தி.மு.க வர்த்தகர் அணி துணை அமைப்பாளராக உள்ளார். இவர் நேற்று காலை கூட்டேரிப்பட்டில் உள்ள தி.மு.க பிரமுகரின் இல்ல துக்க நிகழ்ச்சிக்கு சென்றிருந்தார். அங்கு வந்த மயிலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். ஆர். மாசிலாமணி உள்ளிட்ட தி.மு.க கட்சி நிர்வாகிகளிடம் சதீஷ் பேசிக்கொண்டிருந்தார். அப்போது திடீரென்று அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி கீழே விழுந்தார். உடனே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். ஆர். மாசிலாமணி மயங்கி விழுந்த அவரை பரிசோதனை செய்தார். அதன் பின்னர் சிகிச்சைக்காக திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு தனது காரில் அழைத்துச் சென்றார். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் இறந்து விட்டதாக கூறியதை அடுத்து அவரது உடல் கூட்டேரிப்பட்டில் உள்ள அவரது வீட்டிற்கு கொண்டு வரப்பட்டது. அங்கு பொதுமக்கள் மற்றும்



கட்சியினரின் இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிக்காக வைக்கப்பட்டது. பின்னர் இன்று காலை அவரது உடல் கூட்டேரிப்பட்டில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

மாரடைப்பால் உயிரிழந்த தி.மு.க ஒன்றிய வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் சதீஷ்க்கு அகிலா என்ற மனைவியும் அகிலேஷ் என்ற 4 வயது ஆண் குழந்தையும் உள்ளது.

# இந்திய ரயில்வேயை தனியார்மயப் படுத்துவதற்கான திட்டம் எதுவும் இல்லை: அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தகவல்களை அளித்தார்

புதுதில்லி, ஆக 01, 2021: நாடாளுமன்றத்தின் மக்களவையில் கேள்விகளுக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த ரயில்வே, தகவல் தொடர்பு மற்றும் மின்னணு & தகவல் தொழில்நுட்பம் அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் கீழ்காணும் தகவல்களை அளித்தார்.

இந்திய ரயில்வேயை தனியார்மயப் படுத்துவதற்கான திட்டம் எதுவும் இல்லை. இடவசதியின்மையால் சுமார் 5 கோடி பயணிகள் 2019-20-ம் ஆண்டு காத்திருப்பு பட்டியலில் இருந்தனர். இந்த இடைவெளியை சமன் செய்வதற்காக, வந்தே பாரத், தேஜாஸ், எல்எச்பி மற்றும் விஸ்டாடோம் உள்ளிட்ட பெட்டிகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கையை இந்திய ரயில்வே ஏற்கனவே எடுத்து வருகிறது. அரசு-தனியார் கூட்டு முறையின் கீழ் 12-க்கும் மேற்பட்ட பிரிவுகளில் 151 ரயில்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை இந்திய ரயில்வே வரவேற்றிருந்தது. இந்த ரயில்கள் ஏற்கனவே உள்ள ரயில் சேவைகளுக்கு கூடுதலாக இருக்குமே தவிர, தற்போதுள்ள பயணிகள் ரயில் சேவைகள் இதனால் பாதிக்கப்படமாட்டாது. மேலும் தகவல்களை http://www.indianrailways.gov.in எனும் தளத்தில் பார்க்கலாம்.

ஆதர்ஷ் நிலைய திட்டத்தின் கீழ் ரயில் நிலையங்களின் மேம்பாடு/நவீனமயமாக்கல் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் கீழ் தெற்கு ரயில்வேக்கு 2018-19-ல் ரூ 108.47 கோடியும், 2019-20-ல் ரூ 111.55 கோடியும், 2020-21-ல் ரூ 213.11 கோடியும், 2021-22-ல் 224.57 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1253 ரயில் நிலையங்கள் மேம்பாட்டிற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. கொவிட்-19 பெருந்தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக, 2022 மார்ச் 23 முதல் வழக்கமான பயணிகள் ரயில் சேவைகளை இந்திய ரயில்வே தற்காலிமாக நிறுத்தியது. மாநில அரசுகளின் ஆலோசனைகளை கருத்தில் கொண்டு சிறப்பு ரயில்கள் மட்டுமே தற்போது இயக்கப்படுகின்றன. போக்குவரத்து தேவை அதிகமுள்ள தடங்களில் 'க்ளோன் ரயில்கள்' இயக்கப்படுகின்றன. 2021 ஜூலை 26-ன் படி, 22 க்ளோன் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

2019-20 மற்றும் 2020-21 ஆகிய இரண்டு வருடங்களில் ரயில் விபத்துகளின் விளைவாக பயணிகள் யாரும் உயிரிழக்கவில்லை. 2016-17 முதல் 2020-21 வரையிலான ஐந்து வருடங்களில் விபத்துகளின் எண்ணிக்கையும், உயிரிழப்புகளும் வெகுவாக குறைந்துள்ளன. 2019 ஜனவரி 31 அன்று ஆளில்லாத அனைத்து லெவல் கிராசிங்குகளையும் இந்திய ரயில்வே நீக்கியது. மக்களின் பாதுகாப்புக்காக பல்வேறு நடவடிக்கைகளை இந்திய ரயில்வே எடுத்து வருகிறது. இந்திய ரயில்வேயின் 5374 ரயில் நிலையங்களில் காத்திருப்பு அறைகள்/கூடங்கள் உள்ளன. மிச்சமிருக்கும் நிலையங்களில் அமர்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ரயில் நிலையங்களை மேம்படுத்துவதற்கான/நவீனமயப்படுத்துவதற்கான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பயணிகளின் எண்ணிக்கை மற்றும் நிதி நிலைமையின் அடிப்படையில் இவை செய்யப்படுகின்றன. அகலப்பாதை தடங்களை துரித கதியில் மின்மயமாக்குவதற்கான மிகப்பெரிய திட்டத்தை இந்திய ரயில்வே செயல்படுத்தி வருகிறது. கொங்கன் ரயில்வேயின் 740 ரூட் கிலோமீட்டர் உள்ளிட்ட 64,689 ரூட் கிலோமீட்டருக்கான மொத்த அகலப்பாதை தடங்கள் இந்திய ரயில்வேயில் உள்ளன. இதில் 71 சதவீதம் ஏற்கனவே மின்மயமாக்கப்பட்டு விட்டன. மிச்சமிருப்பவற்றை மின்மயமாக்குவதற்கான பணிகள் துரித கதியில் நடந்து வருகின்றன. 2016-17-ம் ஆண்டில் இதற்கான ஒதுக்கீடு ரூ 3,396 கோடியாகவும், செலவு ரூ 2,956 கோடியாகவும் இருந்த நிலையில், 2020-21-ம் ஆண்டில் இதற்கான ஒதுக்கீடு ரூ 6,326 கோடியாகவும், செலவு ரூ 6,141 கோடியாகவும் இருந்தது.

# திண்டிவனத்தில் பைக் திருட்டில் ஈடுபட்ட சென்னை இளைஞர்களை உயிரை பனயம் வைத்து பிடித்த போலீசாருக்கு எஸ்.பி. பாராட்டு

திண்டிவனம், ஆக. 01 2021: திண்டிவனத்தில் சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் வாகன சோதனையின் போது சென்னை நோக்கி சென்ற இருசக்கர வாகனத் திருடர்கள் இரண்டு பேரை போலீசார் உயிரை பணயம் வைத்து பிடித்தனர். விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கொரோனா ஊரடங்கு தளர்வுக்கு பின் குற்றச் சம்பவங்கள் அதிகரிக்க துவங்கியுள்ளது. இந்நிலையில் சில தினங்களுக்கு முன்பு திண்டிவனம் நகர காவல்நிலையத்திற்கு வந்த காவல் துறை டி.ஐ.ஜி., பாண்டியன் மற்றும் விழுப்புரம் எஸ்.பி., ஸ்ரீநாதா ஆகியோர் குற்றச் சம்பவங்களை தடுப்பதற்காக காவலர்கள் முறையான ரோந்து பணியில் ஈடுபட வேண்டும் என்றும், இரவு ரோந்து பணியின் போது சீருடை இல்லாமல் சாதாரணமாக உடை அணிந்து போலீசார் ரோந்துப் பணியில் ஈடுபட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சென்றனர். இதனையடுத்து குற்றவாளிகளை பிடிக்க திண்டிவனம் டி.எஸ்.பி., கணேசன் தலைமையில் இன்ஸ்பெக்டர் மூர்த்தி, போலீசார் ஜனா, சக்திவேல், வெற்றிவேல் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டிய வீராங்குளம் பகுதியில் திண்டிவனம் சப் இன்ஸ்பெக்டர் ஆனந்தராசன் தலைமையில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருக்கும் போது விழுப்புரத்தில் இருந்து சென்னை மார்க்கமாக இருசக்கர வாகனத்தில் மின்னல் வேகத்தில் வந்த 2 பேர் போலீசாரைக் கண்டதும் அதிவேகத்தில் வாகனத்தை ஓட்ட முயன்றனர். அப்போது அங்கிருந்த போலீசார் அவர்களை மடக்கிப் பிடிக்க முயற்சி செய்த போது இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு பேரில் ஒருவர் தன் கையில் மறைத்து வைத்திருந்த கத்தியால் சப் இன்ஸ்பெக்டரை வெட்டுவதற்கு முயற்சி செய்தார். மற்றொருவர் இரண்டு சக்கர வாகனத்தை விட்டு இறங்கி அருகிலிருந்த கடைகளில் இருந்த பாட்டில்களை எடுத்து போலீசார் மீது வீசினார். இந்நிலையில் போலீசார் ஜனார்த்தனன், சிவக்குமார், வெற்றிவேல், ஆகியோர் அவர்களை மின்னல் வேகத்தில் செயல்பட்டு உயிரைப் பணயம் வைத்து சினிமா பாணியில் மடக்கிப் பிடித்தனர். இதில் போலீஸ்காரர் சிவகுமாரின்



காலில் அந்த இளைஞர் கையில் இருந்த கத்தியால் குத்தியதில் லேசான காயம் ஏற்பட்டது. பிடிபட்ட இருவரையும் திண்டிவனம் காவல் நிலையம் அழைத்து வந்தனர். பின்பு போலீசார் நடத்திய விசாரணையில் சென்னை ராமாபுரத்தைச் சேர்ந்த தேவா என்பதும், போரூரைச் சேர்ந்த அரவிந்தன் என்பதும், இவர்கள் சென்னை அயனம்பாக்கத்தில் ஒருவரது வீட்டின் முன் நிறுத்தியிருந்த பல்சர் பைக்கை உடைத்து திருடி வந்ததும், அந்த பைக்கை பெட்ரோல் தீர்ந்து விட்டதால் திண்டிவனத்தில் விட்டு, விட்டு மகாத்மா காந்தி நகரில் உள்ள ஒரு வீட்டில் இருந்த எப்.இசட் பைக்கை திருடிக் கொண்டு கேரளாவிற்குச் சென்று உல்லாசமாக இருந்து விட்டு மீண்டும் சென்னைக்கு சென்றுக் கொண்டிருப்பதும் தெரிய வந்தது. இந்நிலையில் போலீசார் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்தனர். இந்த இருவர் மீதும் சென்னை உள்ளிட்ட பகுதிகளில் கஞ்சா மற்றும் வழிப்பறி வழக்குகள் தலா 3 உள்ளது.

சென்னை முழுவதும் சி.சி.டிவி கேமராக்கள் அதிகளவில் பொருத்தப்பட்டுள்ளதால் குற்ற சம்பவங்களில் ஈடுபடும் நபர்கள் கடந்த சில மாதங்களாக கிராமபுறங்களில் படை எடுக்கத் துவங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது. பைக் திருடர்களை உயிரை பணையம் வைத்து பிடித்த போலீஸாரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீ நாதா பாராட்டினார்.

# பல நாடுகளில் ஆயுஷ் மருந்துகள் பிரபலம்: மத்திய அமைச்சர் தகவல்

புதுதில்லி, ஆக 01, 2021: பல நாடுகளில் ஆயுஷ் மருந்துகள் பிரபலமடைந்துள்ளதாக ஆயுஷ் துறை இணையமைச்சர் சர்பானந்தா சோனோவால் கூறியுள்ளார். அவர் மக்களவையில் எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்த பதிலில் கூறியதாவது: சுகாதாரம், உடல்தகுதி மற்றும் வாழ்க்கை முறை மாற்றம் குறித்த விழிப்புணர்வு தற்போது அதிகரித்துள்ளது. ஆயுர்வேதம், யோகா போன்றவற்றுக்கான தேவை, சர்வதேச அளவில் அதிகரித்துள்ளது. நேபாளம், இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமன், சவுதி அரேபியா, பஹ்ரைன், மலேசியா, மொரிஷியஸ், ஹங்கேரி, செர்பியா, தான்சானியா, சுவிட்சர்லாந்து, கியூபா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் ஆயுர்வேதம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ருமேனியா, ஹங்கேரி, லத்வியா, செர்பியா மற்றும் ஸ்லோவேனியாவில் ஆயுர்வேத மருத்துவ முறை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. வங்கதேசம், இலங்கை, மலேசியா, பாகிஸ்தான், பஹ்ரைன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் தான்சானியாவில் யுனானி முறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை மற்றும் மலேசியாவில் சித்தா அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சோவா ரிக்பா மருத்துவ முறை, பூட்டான் மற்றும் மங்கோலியாவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை, வங்கதேசம், பாகிஸ்தான், ஓமன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ரஷ்யா மற்றும் தான்சானியாவில் ஹோமியோபதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கானா, சிலி, கொலம்பியா, ருமேனியா, துருக்கி, கனடா ஆகிய நாடுகளிலும் இது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆயுஷ் மருந்துகள், 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆயுர்வேத மருந்துகளின் தரப்படுத்தல்: ஆயுர்வேத, சித்தா மற்றும் யுனானி அதிகாரப்பூர்வ விதிமுறை மற்றும் ஒழுங்குமுறை தொகுப்புகளை வெளியிடுவதற்கும், மாற்றியமைப்பதற்கும் மருந்தியல் ஆணையம் பொறுப்பாகும். நாட்டில் ஆயுர்வேத மருந்துகளின் தரப்படுத்தலுக்காக, ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதிக்கான மருந்தக ஆணையத்தை அரசு நிறுவியுள்ளது. இந்திய ஆயுர்வேத மருந்தகம் இந்திய சித்த மருந்தகம் யுனானி மருந்தகம் மற்றும் இந்திய ஹோமியோபதி மருத்தகம் ஆகியவற்றை வெளியிடுவதும், மாற்றியமைப்பதும் ஆணையத்தின் முதன்மைப் பணி. ஆயுர்வேத, சித்தா, யுனானி மற்றும் ஹோமியோபதி மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறனை, உறுதிப்படுத்த மருந்தியல் தரநிலைகள் அடிப்படை தேவை.

சமீபத்திய ஆண்டுகளில் பாரம்பரிய மருத்துவமுறை அதிகரிப்பு: ஆயுர்வேத மருந்து வசதிகளை, மக்கள் பயன்படுத்தும் போக்கும் அதிகரித்துள்ளது. ஆயுர்வேதாவை ஊக்குவிக்கும் பல திட்டங்களை மத்திய அரசு அமல்படுத்தியுள்ளது. நாட்டின் பல பகுதிகளில் 5 ஆயுர்வேத தேசிய மையங்கள், ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் உள்ளன. அவை தரமான ஆயுர்வேத மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது. கொரோனா தொற்று பரவல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்: கொவிட்-19 சிகிச்சையில் ஆயுஷ் மருத்துவ முறைகளின் பங்கு குறித்து, பல வித ஆய்வுகளை ஆயுஷ் அமைச்சகத்தின் தேசிய மையங்கள் மற்றும் ஆராய்ச்சி கவுன்சில்கள் நடத்தின. கொவிட்-19 சிகிச்சைக்கு ஆயுஷ்-64 மற்றும் கபசுர குடிநீர் ஆகியவை அடையாளம் காணப்பட்டன. மிதமான கொவிட் பாதிப்புக்கு, ஆயுஷ்-64 மருந்தின் திறன் மருத்துவ பரிசோதனையில் நிரூபிக்கப்பட்டது. சித்தா தயாரிப்பான கபசுர குடிநீர், கொவிட்-19 சிகிச்சைக்கான மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. மிதமான கொவிட் பாதிப்பு சிகிச்சைக்கு கபசுர குடிநீர் பயனுள்ளதாக இருந்தது கண்டறியப்பட்டது.

# 92.8 சதவீத ரேஷன் அட்டைகள் ஆதார் எண்ணுடன் இணைப்பு

புதுதில்லி, ஆக 01, 2021: நாட்டில் 92.8 சதவீத ரேஷன் அட்டைகள், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளதாக, மத்திய நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொதுவிநியோகத்துறை இணையமைச்சர் திருமிகு சாத்வி நிரஞ்சன் ஜோதி தெரிவித்துள்ளார். அவர் மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்த பதிலில் கூறியிருப்பதாவது: மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் 21.91 (92.8%) கோடி ரேசன் அட்டைகளை ஆதார் எண்ணுடன் இணைக்கும் பணியை முடித்து விட்டன. இதில் தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 70.94 கோடி (90 சதவீதம்) பயனாளிகள் உள்ளனர். நாட்டில் உள்ள சுமார் 4.98 லட்சம் நியாய விலை கடைகளில் (92.7 சதவீதம்), கடந்த 23ம் தேதி வரை, மின்னணு - விற்பனை இயந்திரங்கள் உள்ளன. செயல்பாட்டில் 5.38 லட்சம் நியாய விலை கடைகள்: பொது விநியோக திட்டத்தின் கீழ், நாட்டில் 5.38 லட்சம் நியாய விலை கடைகள் செயல்பாட்டில் உள்ளன. உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாக பீகாரில் அதிக அளவிலான நியாய விலை கடைகள் உள்ளன. உத்தரப் பிரதேசத்தில் 80,493, மகாராஷ்டிராவில் 52,532, பீகாரில் 47,032, தமிழகத்தில் 34,776 நியாய விலைக் கடைகள் உள்ளன. இதுவரை இல்லாத அளவில் 2020-21ம் ஆண்டில் நெல், கோதுமை கொள்முதல் : 2020-21 காரீப் சந்தை பருவத்தில், 869.29 லட்சம் மெட்ரிக் டன் நெல்லும், 2021-22 ராபி சந்தை பருவத்தில் 433.32 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இது இதுவரை இல்லாத அளவுக்கு மிகப் பெரிய கொள்முதல். கோதுமை: பஞ்சாப், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தரகாண்ட், குஜராத், இமாச்சலப் பிரதேசம் மற்றும் ஜம்மு & காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் 2021-22 ராபி சந்தை பருவத்தில் கோதுமை அதிகளவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நெல்: பஞ்சாப், பீகார், குஜராத், தெலங்கானா, ஜார்கண்ட், கேரளா, மத்தியப் பிரதேசம், ஒடிசா, தமிழ்நாடு, உத்தரகாண்ட் மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 2020-21 காரீப் சந்தை பருவத்தில் அதிகளவிலான நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

# ராக்கி கடிதங்களுக்கான சிறப்பு ஏற்பாடுகளை தபால் துறை செய்துள்ளது

புதுதில்லி, ஆக 01, 2021: ராக்கி பண்டிகை 2021 ஆகஸ்ட் 22 அன்று கொண்டாடப்படவுள்ளது. ராக்கி கடிதங்களுக்கான சிறப்பு ஏற்பாடுகளை தபால் துறை செய்துள்ளது. இதர மாநிலங்களுக்கு ராக்கி தபால்களை அனுப்புவதற்கான சிறப்பு ஏற்பாடுகள் 2021 ஆகஸ்ட் 16 வரை செய்யப்பட்டுள்ளது என்றும், தில்லிக்குள் அனுப்புவதற்கான சிறப்பு ஏற்பாடுகள் 2021 ஆகஸ்ட் 17 வரை செய்யப்பட்டுள்ளது என்றும் அறிக்கை ஒன்றில் தில்லி வட்டத்திற்கான தலைமை தபால் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

